# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2082/59 - 2018 අගෝස්තු මස 03 වැනි සිකුරාදා - 2018.08.03

*2082/59 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1925/59 ஐக் கொண்ட 2015.07.29 ஆந் திகதிய மற்றும் இல. 1996/25 ஐக் கொண்ட 2016.12.06 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் திருத்தியமைக்கப்பட்டு, இல. 1877/27 ஐக் கொண்ட 2014.08.28 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் பின்வரும் திருத்தங்கள் உள்ளடக்கப்படுகின்றன :

***7.3.3.1 எழுத்துமூலப் பரீட்சை :***

| பாடங்கள் | காலம் | உச்சப் புள்ளிகள் | சித்தியடைய பெற்றுக்கொள்ள வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| விடய அறிவு | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| நுண்ணறிவு | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |

**குறிப்பு**.- "நுண்ணறிவுப் பரீட்சை அனைத்துத் திணைக்களங்களுக்கும் பொதுவான வினாத்தாளாகவும், விடய அறிவு சம்பந்தமான வினாத்தாள் அந்தந்த திணைக்களங்களின் ஆட்சேர்ப்புத் திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பாடத்திட்டத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட வினாத்தாளாகவும் இருத்தல் வேண்டும். இப்பரீட்சையானது, பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும்.


1A - G 28219— 17 (2018/08)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*11.* **பதவிகளுக்கு நியமித்தல் :**

*11.2* ***தெரிவுசெய்யப்படும் முறை.***- சேவை மூப்பு மற்றும் திறமையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபை மூலம் 1 ஆம் தரத்துக்கான பதவிகளுக்குத் தெரிவுசெய்யப்படுவர். அந்தந்த திணைக்களங்களின் பதவிகளுக்கு நியமிப்பதற்குப் பூர்த்திசெய்ய வேண்டிய தகைமைகள் குறித்த ஆட்சேர்ப்புத் திட்டங்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

***குறிப்பு***.- அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் சேவை மூப்பு மற்றும் திறமைக்கு புள்ளிகள் வழங்கும் திட்டம் விண்ணப்பங்கள் கோரப்படும் சந்தர்ப்பத்தில் வெளியிடப்படும்.

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பின் பிரகாரம்,*

*எம். ஏ. பி. தயா செனரத்,*
*செயலாளர்,*
*அரசாங்க சேவை ஆணைக்குழு.*

*அரசாங்க சேவை ஆணைக்குழு,*
*இல. 1200/9, இராஜமல்வத்த வீதி,*
*பத்தரமுல்லை,*
*2018, யூன் 19.*

*08-650*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*